## கால்நடை பராமரிப்பு, பால்பண்ணை மற்றும் கோழிப்பண்ணை

**(இனம் . 4)**

கால்நடை மற்றும் கோழிவளர்ப்பு மூலம் தொடர்ந்து வருவாய் கிடைப்பதனால் தொடர்ந்து உழைப்பூதியமும் தொழில் வாய்ப்பும் அளிக்கப்பெறுவதால் மாநிலத்தின் பொருளாதாரத்தின் கால்நடை பராமரிப்பானது முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

நம் மாநிலத்தில் கால்நடை இனவிருத்தி, கால்நடைகளுக்கு நலம் பேணுதல், தீவனப் பெருக்கம், கால்நடை பராமரிப்பு, விரிவாக்கம், கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றின் மீதான திட்டங்களின் செயலாக்கம் வாயிலாக மாநிலத்தில் கால்நடையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்பு, பால்பண்ணை மற்றும் கோழிப்பண்ணை ஆகியவற்றின் சிறப்புக்கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### கால்நடை பராமரிப்பு

02. **1989** ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின்படியும் **1995** ஆம் ஆண்டின் திட்டமிடப்பட்ட கால்நடைத் தொகையின்படியும் தமிழ்நாட்டின் பசு, எருமை ஆகியவற்றின் இயல்பான வளர்ச்சி வீதம் வருமாறு :

| | மொத்த கால் நடைகள் (கோடிகளில்) | | இனவிருத்திக்குத் தகுதியான கால்நடைகள் (கோடிகளில்) | |
|---|---|---|---|---|
| | 1989 | 1995 | 1989 | 1995 |
| ஆவினம் | 0.94 | 0.86 | 0.32 | 0.29 |
| எருமையினம் | 0.31 | 0.31 | 0.16 | 0.15 |

**1989–90** ஆம் ஆண்டு **34** லட்சம் டன்னாக இருந்த மொத்த பால் உற்பத்தியின் அளவு **1995–96** ஆம் ஆண்டில் 37.90 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. **1995–96** ஆம் ஆண்டில் மதிப்பிடப் பெற்ற உற்பத்தி 204.8 கோடி முட்டைகள் என்றும் 40267.40 மெட்ரிக் டன் இறைச்சியாகவும் உள்ளது. இது மாநிலத்தின் ஊரகப் பொருளாதாரத்தில் கால்நடை பராமரிப்பின் விரிவாக்கத்தின் முக்கியத்துவத்தைக் குறிக்கின்றது.

கால்நடை அபிவிருத்தித் திட்டத்தைத் தவிர இந்த துறை செம்மறி ஆடு அபிவிருத்தி, வெள்ளாட்டுப் பெருக்கம், பன்றி வளர்ப்பு, கோழியினப் பெருக்கம், முயல் அபிவிருத்தி, தீவன அபிவிருத்தி ஆகியவை தொடர்பிலான நடவடிக்கைகளையும் வறுமையை ஒழிப்பதற்காகக் மேற்கொள்கிறது. கால்நடை பராமரிப்புச் துறை கீழ்காணும் பயனளிக்கும் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. செம்மறி ஆடு, பால்பண்ணை, பன்றி வளர்ப்பு மற்றும் கன்று வளர்ப்பு ஆகிய பிரிவுகளை ஏற்படுத்துவதற்கு விவசாயிகளை ஊக்குவிக்கின்றது. நிதியுதவி அளிப்பது நிறுவனங்களின் பொருளாதாரம் நிலைத்திருக்க உதவுகிறது. மைய சிறப்பு உதவி, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் இதன் பயன்கள் விரிவாக்கப்பட்டுள்ளன.

நீடித்திருக்கக் கூடிய கால்நடை உற்பத்தி, அதிகரிக்கப்பட்ட பால் உற்பத்தி, கால்நடை உடைமையாளர்களின் வருமானப் பெருக்கம் ஆகியவற்றிற்கு வழிவகை செய்வதற்கு வெளியிலிருந்து கிடைக்கும் உதவியுடன் பின்வரும் திட்டங்களை அரசு செயல்படுத்துகின்றது.

1. உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கால்நடை மேம்பாடு.

2. உலகவங்கி நிதி உதவியுடன் கூடிய கால்நடை பராமரிப்பு திட்டத்தின் வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டம்.

3. ஐரோப்பிய குழுமநிதி உதவியுடன் கூடிய செயல்படுத்தப்படும் ஆடு வளர்ப்புத் திட்டம்.

4. டானிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம்.

**பால்பண்ணை**

03. பால்வளத் திட்டங்கள் அனைத்தும் குஜராத் மாநிலத்தில் உள்ளதைப் போன்ற ஆனந்த் நிறுவன கூட்டுறவுச் சங்கங்களைப் போன்று பால் கூட்டுறவு சங்கங்களை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதனுடைய நிர்வாக அமைப்பு மூன்று படி நிலைகளைக் கொண்டதாகும். அடிப்படையில் (கிராம அளவில்) பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமாகவும், இடையில் (மாவட்ட அளவில்) பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் ஒன்றியமாகவும் மேல்மட்டத்தில் (மாநில அளவில்) ஒன்றியங்களின், இணையமாகவும், இயங்கி வருகின்ன.

பால்பண்ணைக் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாகப் பால் வளத்துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ள பெரும் அளவிலான நடவடிக்கைகளின் விவரம் வருமாறு :

பால் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு இலவசமாக கால்நடை மருத்துவ வசதி. செயற்கை முறை கருவூட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த சரிவிகித கால்நடை தீவனம் வழங்குதல் மற்றும் உறுப்பினர்களுக்கு நவீன கால்நடை பராமரிப்புப் பயிற்சி முதலியன இத்துறையினால் அளிக்கப்பட்டு வருகின்றது. அதிக அளவில் பால் கொள்முதல் செய்யவும், பதப்படுத்தவும், பால் விற்பனை செய்யவும். தேவைப்படும உள்ளமைப்புகளுக்கு ஏற்பாடு செய்தல் ஆகியனவும் அளிக்கப்பெறுகிறது. பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல், கொள்முதல் செய்தல். பதப்படுத்துதல், பால் மற்றும் பாலிலிருந்து தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்தல் ஆகிய வணிக நடவடிக்கைகளை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணைய்ம (ஆவின்) செயற்படுத்துகிறது. மேலும் இந்த இணையம் பால்வளத் திட்டங்களை (வெண்மைப் புரட்சித் திட்டங்களை) தேசீய பால் பண்ணை மேம்பாட்டு வாரிய நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில் செயற்படுத்தி வருகின்றது. 31.3.96 ஆம் நாளன்று 27.30 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட 10554 தொடக்கப்பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் 17 மாவட்ட நிலை பால் ஒன்றியங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் 1995–96 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 18.25 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்தன. 19 பால்பண்ணைகளும் 42 பால் குளிரூட்டும் நிலையங்களும் பாலை பதப்படுத்தும் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுகின்றன.

04. சில சிறப்புத் திட்டங்களான மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஆதிதிராவிடர் நலத் திட்டம் முதலியனவும், பால் பெருக்குத் துறையால் தொடர்புடைய நிதி முகமைகளிலிருந்து நிதிகளைப் பெற்றுச் செயல்படுத்தப்பட்டுவருகின்றன.

05. பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல், பதிவு செய்தல் அவற்றை மேற்பார்வை செய்தல் மற்றும் பால் கூட்டுறவு சங்கங்கள் அனைத்தையும் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவு இணையம், ஆகியவற்றைக் கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகளையும், மேற்கொள்வதும் பால்வளத்துறையின் மற்றொரு வகை நடவடிக்கையாகும். கிராம அளவில் பால் உற்பத்தியாளர்களை கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்படுகின்றன. இச்சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் மட்டும உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவ்வுறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலை மேற்படி சங்கங்கள்

சேகரிக்கின்றன. ஒவ்வொரு அங்கத்தினரும் வழங்கும் பாலைத் தனித்தனியாகப் பரிசோதித்து அதன் தரத்தின் அடிப்படையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட விலையில் பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது. கொள்முதல் மற்றும் இடுபொருட்கள், மருத்துவப்பிரிவு / மருத்துவ வசதி வசதிக்குழுக்களில் இருக்கும் கால்நடை உதவி மருத்துவர்களால் பால் உற்பத்தியாளர்களின் மாடுகளுக்கு மருத்துவ வசதி அவர்கள் வீட்டிலேயே வழங்கப்படுகிறது. மேலும் குறைந்த செலவில் செயற்கைமுறைக் கருவூட்டல் வசதிகளும் அளிக்கப்படுகிறது. இச்சங்கங்களின் செயலாளர்களுக்கு, செயற்கை முறை கருவூட்டல் பயிற்சியும் முதலுதவி செய்யும் பயிற்சியும் அளிக்கப்டுகின்றன. ஒவ்வொரு சங்கமும் தங்கள் சொந்தச் செலவில் முதலுதவிப் பெட்டிகள் வைத்துள்ளன. இக்கிராம சங்கங்களில் கொள்முதல் செய்யப்படும் பாலில் உள்ளூர் உபயோகத்திற்கு என ஒரு குறிப்பிட்ட அளவு வைத்துக் கொண்டு எஞ்சியுள்ள பால் மாவட்ட ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

## கோழியினப் பெருக்கம்

06. நல்ல தரமான வெள்ளையின் குஞ்சுகளை வளர்க்கவும், இனப்பெருக்கம் செய்யவும் கால்நடை பராமரிப்புத் துறையினால் 26 கோழியினப் பெருக்க நிலையங்களும் 2 குஞ்சு பொரிப்பகங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. விவசாயிகள் நன்மைக்காக இந்த கோழியினப் பெருக்க நிலையங்கள் செயல்முறை விளக்க நிலையங்களாகவும் செயற்பட்டுவருகின்றன. இந்த நிலையங்களில் வளர்க்கப்படும் குஞ்சுகள் உள்ளூர் விவசாயிகளுக்கு விற்கப்படுகின்றன. உள்நாட்டுக் கோழியினப் பெருக்கத்தைப் பாதுகாப்பதற்காக இந்த இனப் பெருக்கங்களை பெருக்கும் பணியை காட்டுப்பாக்கத்திலுள்ள கோழிப் பண்ணையும், ஒசூரிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையும் மேற்கொள்கின்றன. கோழியினங்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து கோழிகளுக்கு நோய்கள் பரவாமல் தடுக்க எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை பற்றி விவசாயிகளுக்கு உரிய காலத்தில் விவரித்து விவசாயிகள் பயனடையத்தக்க வகையில் ஈரோட்டிலும் சேலம் மாவட்டத்தில் ஆண்டலூர் கேட்டிலும் கோழி புலனாய்வு கூடங்கள் இரண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## கால்நடை மருத்துவ உள்ளமைப்புகள்

07. மாநிலத்தில் ஏராளமான கால்நடை மருத்துவ நிலையங்கள் உள்ளன.

| | | |
|---|---|---|
| அ. | கால்நடை மருத்துவ துணை நிலையங்கள் | 2147 |
| ஆ. | கால்நடை மருந்தகங்கள் | 765 |
| இ. | கால்நடை மருத்துவமனைகள் | 94 |
| ஈ. | சுகாதார மையங்கள் | 21 |
| உ. | கால்நடை நோய் பல்நோக்கு மருத்துவ மையம் | 8 |
| ஊ. | கால்நடை நோய் தடுப்பு கண்காணிப்பு பிரிவுகள் | 14 |
| எ. | கால்நடை மருத்துவ ஊர்திப் பிரிவுகள் (உள்ளாட்சி ஒன்றிய அளவில் – 362) | 436 |

ஒவ்வொரு உள்ளாட்சி ஒள்றியத்திற்கும் ஒரு கால்நடை மருத்துவ ஊர்திப் பிரிவு என்ற வகையில் 362 கால்நடை மருத்துவ ஊர்த்திப்பிரிவுகள் உள்ளமைப்பைக் குறிப்பிடலாம். உள்ளாட்சி ஒன்றியமானது கால்நடை பராமரிப்புத் துறையின் விரிவாக்க அலுவலரின் பணிகளைப் பயன்படுத்திக் கொள்கிறது. 183 பதிவு செய்த இறைச்சி வெட்டுக் கூடங்கள் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன. இருப்பினும் கால்நடை பராமரிப்புத் துறை இக்கூடங்களில் இறைச்சி பார்வையிடலை நடத்தி வருகின்றது.

## சட்ட ஒதுக்கீடுகள்

08. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், கால்நடை பராமரிப்பிற்குத் தொடர்புடைய பின்வரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. பொது மக்களுக்குரிய கிராம உள்ளாட்சிக்குத் தேவையான நிற்குமிடங்கள், தங்குமிடங்கள், கட்டை வண்டி நிற்குமிடங்கள், பொது மக்களின் கால்நடைகள் தங்குமிடங்கள், பொது இறைச்சி வெட்டும் கூடங்கள் ஆகிய இவற்றை ஊராட்சிகள் அமைத்துப் பராமரிப்பதற்கு சட்டப் பிரிவுகள் (2) மற்றும் (ஊ) வில் அத்தகைய ஏற்பாடுகளுக்கு அனுமதி வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியத்திற்குத் தேவையான மருத்துவ நிவாரணத்தை மேற்கொள்ளத் தகுந்த ஒதுக்கீடு செய்வது ஊராட்சி ஒன்றியத்தின் கடமையாகும். மேலும் அரசால் குறிப்பிடப்பட்டவாறு கால்நடை பராமரிப்புக்காக (பிரிவு 112(எ) தேசிய விரிவாக்கப் பணித்திட்ட நிறைவேற்றத்தை மேற்கொள்ள பிரிவு 113 இன்படி ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு அதிகாரங்கள் அளிக்கப் பெறுகிறது. பிரிவு 156 மற்றும் 157 ல் இறைச்சி வெட்டும் கூடங்கள் பற்றி குறிப்பிடுகின்றன. ஊராட்சி, இறைச்சி வெட்டும் கூடங்களுக்கான இடங்களை வழங்கலாம்; அதற்கான வாடகையும் கட்டணமும் விதிக்கலாம் (பிரிவு 156) (அ) இறைச்சி வெட்டும் இடங்களைத் தவிர பிற இடங்களில் இறைச்சி வெட்டுவதைத் தடுத்தல் அல்லது வெட்டுவதை ஒழுங்கு முறைப்படுத்துதல் (ஆ) கால்நடைகளை அறுத்தல் அல்லது தோலுரித்தல், கால்நடைகளை வெட்டி பொது மக்களுக்கு விற்பனை செய்வதற்கு உரிமம் வழங்குதல் (இ) இறைச்சி வெட்டும் கூடங்களை ஆய்வு செய்தல் மற்றும் அலுவலர்களுக்கு மதிப்பூதியம் வழங்குதல் பிரிவு (157) ஆகியவற்றிற்கு விதிகளை அமைக்க அரசுக்கு அதிகாரங்கள் உண்டு.

பிரிவு 245 (1) அட்டவணை 2 இன் கீழ் தண்டங்கள் விதிப்பதற்கான வழிவகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. (அ) பொது இறைச்சி வெட்டும் கூடங்களுக்கு வெளியே கால்நடைகளை வெட்டுவது, அறுப்பது, தோலை உரிப்பது விதிகளை மீறுவதாகும். ரூ.200 வரையில் தண்டம் விதிக்கப்படலாம். (ஆ) உரிமம் இல்லாது அல்லது உரிமத்திற்கு எதிராகக் கால்நடைகளை வெட்டுவது (ரூ.20 தண்டம் விதிக்கப்படலாம்).

09. மேற்கூறியவற்றின் பின்னணியில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கீழ்காணும் அதிகாரங்கள் ஒப்படைக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.

### I. ஊராட்சி

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| 1. கால்நடை பெருக்கம் | 1. கால்நடை மற்றும் கோழியினங்களை நல்ல முறையில் பராமரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல். |
| | 2. ஊராட்சியில் கால்நடை மற்றும் கோழியினக் கண்காட்சி நடத்துதல். |
| | 3. கிராம கால்நடை பிரிவு மற்றும் உறைவிந்து தொழில் நுட்ப மையங்களின் பணிகளை மேற்பார்வையிட உதவி செய்தல். குறைகளை ஊராட்சி ஒன்றியத்திற்குத் தெரிவித்தல். |
| | 4. நோய் மற்றும் தொற்று நோய் பரவுதலை உதவி இயக்குநர் (கால்நடை பராமரிப்பு) ஊராட்சி ஒன்றிய உதவி இயக்குநர் (கால்நடை பராமரிப்பு) ஆகியோரிடம் அறிவித்தல். |

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| | 5. அந்தப் பகுதியில் உள்ள இறைச்சி வெட்டும் கூடங்களின் பணிகளை கண்காணித்து மேற்பார்வை –யிடல், அவைகளைப் பதிவு செய்தல், துப்புரவுப் பணிகளை மேற்கொண்டு பராமரித்தல். |
| | 6. அந்தப் பகுதியிலுள்ள கால்நடை மருத்துவ ஊர்தி பிரிவு, கால்நடை மருத்துவ துணை மையங்கள் மற்றும் மருந்தகங்களின் பணிகளைச் சோதனை செய்தல் மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சிக்கல்கள் குறித்துத் தெரிவித்தல். |
| 2. தீவன அபிவிருத்தி | 1. சமுதாய புல்வெளியில் தீவன பண்ணைகள் அமைத்து, பராமரித்தல், பால்பண்ணை கூட்டுறவு சங்கங்களுடன் இணைந்து தீவன உற்பத்திக்காகச் சமுதாய நிலங்களை வழங்குதல். |
| | 2. சமுதாய மேய்ச்சல் நிலங்களில், புல்வெளிகளில் கால்நடைகள் மேய்வதைக் கட்டுப்படுத்துதல், முறைப்படுத்துதல், கட்டணம் விதித்தல். |
| | 3. உள்ளூர் தீவன வங்கியை ஏற்படுத்தி, வறட்சி மற்றும் பற்றாக்குறை காலங்களில் தீவனத்தைப் பங்கிட்டு அளிக்க ஏற்பாடு செய்தல். |
| | 4. தீவன விதைகள், கன்றுகளை கிராமங்களுக்கு பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்தல். |
| 3. பால்பண்ணை வளர்ச்சி | 1. உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பால் சேகரிக்கும் மையங்களின் செயற்பாடுகளுக்கும் அமைப்புகளுக்கும் வசதி செய்து தருதல். |
| 4. கோழியின் அபிவிருத்தி | 1. கிராமத்தில் கோழியின் அபிவிருத்தி வசதி செய்தல். |

## II. ஊராட்சி ஒன்றியம்

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| 1. கால்நடை பெருக்கமும் கால்நடை மருத்துவப் பணிகளும் | 1. உள்ளூர் தேவைகளுக்கு மட்டுமின்றி தேசீய வேளாண்மை குழுவில் குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டத்தின்படி கால்நடைப் பணிகளுக்காகவும் புதிய கால்நடை மருத்துவமனைகளை அமைத்தல், தற்பொழுதுள்ள மையங்களை பராமரித்தல். |

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| | 2. பல்வேறுபட்ட திட்டங்களின் கீழ் பயனாளிகளுக்கு நல்ல தரமான கால்நடைகளை விநியோகித்தல், நல்லதரமான இனவிருத்திச் செய்யும் கால்நடைகளைப் பற்றி விவசாயிகளிடையே செய்தி பரப்புதல். |
| | 3. கால்நடைகளுக்கான இனப்பெருக்கப் பண்ணைகளை நிறுவுதல், முன்னேற்றுதல், பராமரித்தல் ஆகியவற்றை உருவாக்குதலும் அவற்றின் தேவையை மதிப்பீடு செய்தலும். |
| | 4. தனியார் இனவிருத்தி மையங்கள் மற்றும் குஞ்சு பொரிப்பகங்களுக்கு உரிமம் வழங்குதல். |
| | 5. ஊராட்சிகளின் மூலம் இறைச்சி வெட்டும் கூடங்களைப் பராமரித்தல். |
| | 6. ஊராட்சி ஒன்றியக் குழுவிலுள்ள கால்நடை மருத்துவ பணி நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல் கால்நடை மருத்துவக் கவனிப்பை மறு ஆய்வு செய்தல் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் நோய், தொற்றுநோய் பரவாமல் தடுத்தல். |
| 2. தீவன அபிவிருத்தி | 1. தீவன உற்பத்திக்கான பயிற்சி முகாம்களை அமைத்தல். நிதி உதவி அளித்தல் நல்ல தரமான தீவன விதைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |
| | 2. வறட்சி மற்றும் பற்றாக்குறை காலங்களில் தீவனம் வழங்குதல். |
| 3. பால்பண்ணை வளர்ச்சி | 1. பால் சேகரிப்பதற்காக பால் கிடைக்கும் புதிய இடங்களைத் தொடங்கவும் அதன் வளர்ச்சிக்கும் உதவுதல். |
| | 2. பால் குளிரூட்டும் மையங்கள் கால்நடை தீவன நிலையம், மற்றும் பால்பண்ணை தொழிற்சாலைகளை ஏற்படுத்த பால் உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல். |
| 4. கோழியின அபிவிருத்தி | 1. கோழி வளர்ப்பவர்களுக்கு பயிற்சி அளிக்கவும் கோழி தீவனம் வழங்கவும் ஏற்பாடு செய்தல். |

## III. மாவட்ட ஊராட்சி

| | நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|---|
| 1. | கால்நடை பெருக்கத்திற்கும் மருத்துவப் பணிகளுக்கும் திட்டமிடுதல் | 1. | விவசாயிகள் ஆண்டுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தல், திட்டமிடுதல், மாவட்டங்களிலுள்ள கால்நடை அபிவிருத்தியின் சிக்கல்களையும் எதிர்கால விளைவுகளையும் கணக்கெடுத்து ஆராய்ச்சிச் செய்தல், பணியாளர்களை அளித்தல், கால்நடை அபிவிருத்திக்காக நீண்ட காலதிட்டம் இயற்றுதல். |
| | | 2. | வேளாண்மை நிலைக்குழுவின் மூலமாகவும் மாவட்டங்களில் செயற்படும் கால்நடை அபிவிருத்தித் திட்டங்களை / செயல் திட்டங்களை காலமுறை தோறும் (மூன்று மாதத்திற்கொருமுறை) ஆய்வு செய்தல் கால்நடை பராமரிப்புத் துறை இணை / துணை இயக்குநர் இவ்வாய்வினை மேற்கொள்வர். |
| 2. | பால்பண்ணை வளர்ச்சி | 1. | கால்நடைகள் தொடர்புடைய கால்நடை மருத்துவ சுகாதாரத் திட்டங்களைக் கண்காணித்தல். |
| 3. | கோழியின அபிவிருத்தி | 1. | மா்வட்ட நிலையில் மேற்கொள்ளப்பெறும் கோழியின அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வசதி செய்தல் மற்றும் மறு ஆய்வு செய்தல். |
| | | 2. | மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகப் பிரிவுகளின் பணிகளை ஆய்வு செய்தல். |

### நிருவாகச் சிக்கல்கள்

10. கால்நடை பராமரிப்பு துறையின் மாவட்ட நிருவாகம் மண்டல இணை இயக்குநர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்களைப் ஒப்படைக்கக் கருதப்பட்டதன் விளைவாக கால்நடை மருத்துவ ஊர்தி மருந்தகங்களையும் கால்நடை மருத்துவத் துணை மையங்களையும் சேர்ந்த பணியாளர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படுவர். ஊராட்சி ஒன்றியத்திற்கும் மாற்றுப் பணியின் பேரில் அளிக்கப் பெற்றாலும் அப்பணியாளர்கள் அரசுப் பணியாளர்களாகவே தொடர்ந்து இருப்பர். இப்பணியாளர் மீதான தொழில்நுட்ப மற்றும் நிருவாகக் கட்டுப்பாட்டு அதிகாரங்கள் கால்நடை பராமரிப்புத் துறையின் விரிவாக்க அலுவலர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோரிடம் இருக்கும். பல்வேறு திட்டச் செயலாக்க நடவடிக்கைகள் ஊராட்சி ஒன்றிக் குழுவிற்கு மாற்றப் பெறலாம். பயனிளிக்கக் கூடிய திட்டங்களைச் செயல்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபாடுள்ள ஒரு சில பணியாளர்களை இவ்வாறாக ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு மாற்றுப் பணியின்பேரில் மாறுதல் செய்யலாம். மாநிலத்தின் கால்நடைகளை உயர்த்துவதற்கான நீண்ட காலத்திட்டம், வினைமுறைத் திட்டம் ஆகியவற்றை வரைவதுடன் மாவட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு கால்நடை பராமரிப்பு இயக்ககம் முக்கியமாக தொழில் நுட்ப வழிகாட்டுதல்களையும் அளிக்கும். கால்நடை தரத்தை உயர்த்தும் வழிமுறைகளையும் மாநிலத்திற்காக இவ்வியக்ககம் வரையறுக்கும்.

## நிதிச்சிக்கல்கள்

11. பயனளிக்கச் கூடிய திட்டங்களுக்கு தேவையான நிதிகளை ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றம் செய்யலாம். இத்தகைய திட்டங்களை செயலாற்றுவதற்கு ஆகும் நிறுவாகச் செலவு இயக்கம் மற்றும் நிறுவனச் செலவுகளை ஏற்பதற்கான அரசு மான்யம், கால்நடை மருத்துவ துணை மையங்களிள் செயலாக்கம் மற்றும் ஏனைய செலவுகளுக்கு அரசு மான்யமாக ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு விடுவிக்கப்பெற ஒருங்கிணைந்த ஊரக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தனியொருவர் கறவை மாடுகளைப் பெற்றுக் கொள்ள அரசு ஊக்கத் தொகை வழங்குகிறது. 1995–96 ஆம் ஆண்டில் இத்தகைய திட்டச் செயலாக்கத்திற்கான வரவு செலவு திட்டத்தில் பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(அ) ஆதிதிராவிடருக்கு மத்திய சிறப்பு உதவித் தொகை ரூ.150 இலட்சமும் (ஆ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்தில் பழங்குடியினருக்கு ரூ.24.13 இலட்சமும் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

## சட்டச்சிக்கல்கள்

12. அனைத்து பொது மற்றும் தனியார் இறைச்சி வெட்டும் இடங்களையும், கால்நடை நோயறியும் நிலையங்களையும் பதிவு செய்வதற்கும், உரிய கட்டணத்தை வசூலிப்பதற்கும் ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்குவதற்குத் தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டமும் தமிழ்நாடு ஊராட்சி சட்டமும் திருத்தப்பெற வேண்டும். தேவைப்படும் அறிவிக்கைகள் வெளியிடப்பட வேண்டும்.